
## கதையில் விடுப்பட்டுள்ள இடத்தில் சரியான விடையைத் தேர்ந்தெடுக.

ஒரு அடர்ந்த (1)_______ சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. அது தன்னை (2)_______ யாருமே இல்லை என்று இறுமாப்புடன் இருந்தது. தன்முன் எதிர்பட்ட (3)_______ அனைத்தையும் கொன்று தின்றது. பிராணிகள் அனைத்தும் ஒன்று கூடின. ஒருநாளைக்கு ஒரு பிராணி அதற்கு (4)_______ என முடிவெடுத்தன. அதன்படி நாளுக்கொன்றாகச் சிங்கத்தின் பசிக்கு (5)_______.

ஒரு நாள் குட்டி (6)_______ ஒன்றின் முறை வந்தது. பலம் பொருந்திய சிங்கத்தைத் தன் (7)_______ வீழ்த்திட முயல் எண்ணியது. தான் வரும் வழியில் வேறொரு (8)_______ தன்னைக் கொல்ல முயன்றதாக பொய்யுரைத்தது. ஆத்திரம் கொண்ட சிங்கம் அவ்விடத்திற்குத் தன்னை அழைத்துச் செல்லுமாறு பணித்தது.

இத்தருணத்தைப் பயன்படுத்திக் கொண்ட முயல் தந்திரமாகச் சிங்கத்தைப் பாழுங்கிணற்றுக்கு அழைத்துச் சென்றது. (9)_______ தன் நிழலைப் பார்த்த சிங்கம் அதில் குதித்து இறந்தது. சிங்கம் (10)_______ அறிந்த மிருகங்கள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தன.



| | |
|---|---|
| இறந்ததை | எதிர்க்க |
| காட்டில் | பலியாகின |
| கிணற்றில் | முயல் |
| பிராணிகள் | மதியால் |
| சிங்கம் | இரையாவது |